உள்ளடக்கம்


1. அறிமுகம்______________________________1

*1.1. தலைப்பு*

*1.2. நோக்கு*

*1.3. பணிநோக்கு*

*1.4. பிரதான செயற்பாடுகள்*

*1.5. திணைக்களத்தின் பொறுப்புக்கள்*

2. அடையாள அட்டை தயாரிக்கும் செயற்பாடு தோன்றிய வரலாறு-------------------------------------------2

3. தேசிய அடையாள அட்டை வழங்குவதற்காக தகவல் தொழிநுட்பத்தை ஈடுபடுத்துதல்_____3

*3.1. கணனியை அடிப்படையாகக் கொண்டு இலக்கங்களை இடுதல*

*3.2. கணனியைப் பயன்படுத்தி தேசிய அடையாள அட்டையைத் தயாரித்தல*

*3.3. கணனி சுட்டட்டைகளை வழங்குதல்*

4. தேசிய அடையாள அட்டை வழங்கும் செயற்பாட்டை துரிதப்படுத்துதல்.__________________3

*4.1. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அச்சிடப்பட்ட கணனிமயப்படுத்தப்பட்ட அடையாள அட்டைகளை அறிமுகப்படுத்துதல்*

*4.2. சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளைக் கொண்டமைந்த தேசிய அடையாள அட்டைகளை வழங்குதல்.*

5. 2017 ஆம் வருடத்தில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் தொடர்பான சாராம்சம். 4 - 8

*5.1.. ஒரு நாள் சேவை*

*5.2. நடமாடும் சேவை*

*5.3. பொதுவான சேவை*

6. சட்டரீதியான முன்னேற்றம் ______________________________ 9

7. நிதிசார் முன்னேற்றம்______________________________10

*7.1. செலவீன மதிப்பீடு மற்றும் செலவுகள்*

*.7.2 வருமான மதிப்பீடு மற்றும் வருமானங்கள்*

8. பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள்______________________________11

9. ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்______________________________ 12

10. உள்ளகக் கணக்காய்வு ______________________________ 12

11. ஆளனி தொடர்பான விபரங்கள்______________________________13

*11.1. புதிய நியமனங்கள்*

*11.2. சேவையிலிருந்து விலகுதல்*

*11.3. இடமாற்றம்*

*11.4. விடுவித்தல்கள்*

*11.5. பதவியுயர்வுகள்*

*11.6. மரணங்கள்*

*11.7. ஓய்வு பெறுதல்*

12. பௌதீக வளங்களது முகாமைத்துவம்______________________________14

*12.1 காணி மற்றும் கட்டிடங்கள்*

*12.2 ஏனைய சொத்துக்கள்*

13. e – NIC செயற்திட்டம். ______________________________ 15 - 20

இணைப்பு I. ______________________________ 21

# 1. அறிமுகம்

- 1968 ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கமைய ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஊடாக 1972 ஆம் ஆண்டு முதல் 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கையின் சட்டரீதியான பிரஜைகளைப் பதிவு செய்தல் மற்றும் அடையாள அட்டை வழங்குதல் ஆரம்பமாகியதுடன் அந்த சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கமைய 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07 ஆம் திகதியிலிருந்து ஆட்களைப் பதிவு செய்யும் வயதெல்லை 15 ஆக மாற்றப்பட்டது.

- ஆரம்ப காலத்திலிருந்து கொழும்பு 05, கெப்பெட்டிபொல வீதி, இலக்கம் 38 எனும் முகவரியில் அமைந்திருந்த ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் 2016 செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் பத்தரமுல்லை, ஸ்ரீ சுபுத்திபுர வீதியில் “சுஹுருபாய” கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

## 1.1. தலைப்பு

- அடையாள அட்டை நம்பகத்தன்மைக்குரிய தனிநபர் அடையாளமாகும்.

## 1.2. நோக்கு

- ஒவ்வொரு இலங்கைப் பிரஜைக்கும் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு அடையாளம்.

## 1.3. பணிநோக்கு

- நாட்டிற்குள் அனைத்து இலங்கைப் பிரஜைகளினதும் மனித, சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் சட்ட உரிமைகளை பாதுகாக்கும் வகையிலும், நாட்டை விட்டு செல்கின்ற சந்தர்ப்பத்தில் பாதுகாப்பினை வழங்கும் வகையிலும், அவர்களுடைய தரவுகளை உள்ளடக்கிய தேசிய தனிநபர்களின் தரவு மையத்தினை உருவாக்குதல், எந்தவொரு பிரஜையொருவருடைய ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டிய தேவைகளின் போது தேசிய மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு தகவல்களை வழங்குதல் மற்றும் இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கும் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பு வழங்குதல்.

## 1.4. பிரதான செயற்பாடுகள்

- ஒவ்வொரு இலங்கைப் பிரஜையினதும் தனிநபர் தரவுகளை சேகரித்து தேசிய நபர்களின் தரவுகள் கட்டமைப்பை உருவாக்கி முன்னெடுத்துச்செல்லல்.
- தகைமைபெற்ற இலங்கைப் பிரஜைகளுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்குதல்.
- தேசிய புலனாய்வு மற்றும் பாதுகாப்பு பிரிவுகளுக்குத் தேவைப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நபர்கள் தொடர்பான தகவல்களை விசாரணை செய்தல், உறுதிப்படுத்துதல் மற்றும் தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ளுத்ல.

## 1.5. திணைக்களத்தின் பொறுப்புக்கள்

- ஒவ்வொரு இலங்கைப் பிரஜையினதும் தனிநபர் தரவுகளை சேகரித்து தேசிய நபர்களின் தரவுகள் களஞ்சியத்தினை உருவாக்கி முன்னெடுத்துச்செல்லல்.

- குறித்த வயதினை பூர்த்திசெய்த ஒவ்வொரு இலங்கைப் பிரஜையையும் பதிவு செய்து, தேசிய அடையாள அட்டையினை விநியோகித்தல்.

- இலங்கைப் பிரஜைகளது தனிநபர் தரவுகளை உறுதிப்படுத்தி அத்தாட்சிப்படுத்தல்.

- அரச மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் தகவல்களையும் அறிவினையும் பரிமாற்றிக்கொள்ளுதல்.

- நவீன தொழிநுட்ப அறிவு மற்றும் மனித வளத்தினை விருத்தி செய்வதனூடாக திணைக்களத்தின் வினைத்திறனை கட்டியெழுப்புதல்.

- நாட்டின் பாதுகாப்பிற்கும் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்களை வழங்குதல்.

## 2. அடையாள அட்டை தயாரிக்கும் செயற்பாடு தோன்றிய வரலாறு

- **<u>1972</u>**

1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கமைய 18 வயதிற்கு மேற்பட்ட, இலங்கையில் சட்டரீதியாக வசிப்பவர்களை பதிவு செய்தல் மற்றும் அடையாள அட்டை வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

- **<u>2014.02.28</u>**

உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட SC Application No.93/2013 (F/R) இலக்கத்தையுடைய மனித உரிமைகள் முறையீட்டு வழக்கு தொடர்பாக அந்தநீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் ஆரம்பத்திலிருந்தே சிங்கள மொழியில் மாத்திரம் தயாரிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டையானது, 2014.02.28 ஆந் திகதி தொடக்கம் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் எழுதப்பட்டு வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

- **<u>2016.07.07</u>**

1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கு 2016ஆம் ஆண்டு ஜுலை மாதம் 07ஆந் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கமைய 15 வயதினைப் பூர்த்தி செய்த, இலங்கையில் சட்டப்படி வசிப்பவர்களை பதிவுசெய்தல் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

- **<u>2017.10.27</u>**

சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேசிய அடையாள அட்டை (கையடக்க அட்டை) வழங்கும் செயற்பாடுகள் 2017.10.27ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டன.




புதிய தேசிய அடையாள அட்டையின் புகைப்படமாகும்.

## 3. தேசிய அடையாள அட்டை வழங்குவதற்காக தகவல் தொழிநுட்பத்தை ஈடுபடுத்துதல்

### 3.1. கணனியை அடிப்படையாகக் கொண்டு இலக்கங்களை இடுதல

முதன்முறையாக வழங்கப்படுகின்ற அடையாள அட்டைகளுக்கான இலக்கங்களை இடும் நடவடிக்கையானது, 2007 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம், திணைக்களத்திற்குள்ளேயே மேற்கொள்வதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

### 3.2. கணனியைப் பயன்படுத்தி தேசிய அடையாள அட்டையைத் தயாரித்தல்

கணனியைப் பயன்படுத்தி சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சிடப்பட்ட அடையாள அட்டை வழங்கப்படும் முறைமையானது 2014 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

### 3.3. கணனி சுட்டட்டைகளை வழங்குதல்

தொலைந்து போன அடையாள அட்டைகள் தொடர்பில் இணைப்பிரதி வழங்கும் போது மற்றும் வைத்திருக்கும் அடையாள அட்டையில் திருத்தங்கள் மேற்கொள்ளும் போது தேவைப்படும் திணைக்கள அறிக்கைகளைத் (சுட்டட்டை) தேடும் பணியானது அந்நாட்களில் மனிதவலுவைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஒரு செயற்பாடாகும். தற்போது அந்த சுட்டட்டைகள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளதால் அவை கணனி ஊடாக பரிசோதனை செய்யப்படுகின்றன.

## 4. தேசிய அடையாள அட்டை வழங்கும் செயற்பாட்டை துரிதப்படுத்துதல்.

### 4.1. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அச்சிடப்பட்ட கணனிமயப்படுத்தப்பட்ட அடையாள அட்டைகளை அறிமுகப்படுத்துதல்.

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் எழுதப்பட்ட தேசிய அடையாள அட்டைகளை வழங்குமாறு விண்ணப்பித்து முன்வைக்கப்பட்ட SC Application No.93/2013 (F/R) இலக்கத்தையுடைய மனித உரிமை முறைப்பாட்டு வழக்கு தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் மூலம், இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கும் வரை, 2014.01.01 ஆம் திகதி தொடக்கம் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலுமான அடையாள அட்டை வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுவரை விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் ஒரு மொழியில் மாத்திரம் கையினால் எழுதப்பட்டு வழங்கப்பட்டவைகள் ஆகும். அடையாள அட்டைகள் இரண்டு மொழிகளிலும் கையினால் எழுதும் போது அதற்காக எடுக்கும் காலம், முன்னர் ஒரு மொழியில் மாத்திரம் கையினால் எழுத எடுக்கும் காலத்தைவிட இரண்டு மடங்கு அதிகமாகும். அதேபோல் இதற்கு தேவைப்படும் உத்தியோகத்தர்கள் எண்ணிக்கையும் மிக அதிகமாகும் இதற்குரிய தீர்வாக 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் கணனி மயப்படுத்தப்பட்ட முறைமையின் ஊடாக சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இருமொழிகளிலும் தேசிய அடையாள அட்டைகள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

### 4.2. சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளைக் கொண்டமைந்த தேசிய அடையாள அட்டைகளை வழங்குதல்.

இரத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற முதற் கட்ட நடவடிக்கையாக 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் இந்த திணைக்களத்திற்கே உரித்தான கணனிமயமாக்கல் முறைமை மற்றும் லேசர் தொழிநுட்பத்தை பயன்படுத்தி சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் கொண்டமைந்த அதிநவீன தேசிய அடையாள அட்டைகள் (கையடக்க அட்டை) வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டன.

## 5. 2017 ஆம் வருடத்தில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் தொடர்பான சாராம்சம்.

### 5.1. ஒரு நாள் சேவை

அவசர தேவைகளின் போதும் துரிதமாக அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகளின் பொருட்டும் ஒரு நாளுக்குள் அடையாள அட்டைகளை விநியோகிக்கும் துரித வேலைத்திட்டம் (ஒரு நாள் சேவை) 2003.09.01 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டன. இதன் கீழ் ஒரு விண்ணப்பத்திற்கு ரூ.500/- என்ற வகையில், அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் அறவிடப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் ஒரு நாள் சேவை கட்டணம் ரூ.1000/- யாக திருத்தப்பட்டுள்ளது.

ஒரு நாள் சேவை வேலைத்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை ஒவ்வொரு மாதத்திலும் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கைகளும், இதன் மூலம் திணைக்களம் பெற்றுக்கொண்ட வருமானமும் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| மாதம் | விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம்(ரூ.) |
|---|---|---|
| ஜனவரி | 18,256 | 18,256,000.00 |
| பெப்ரவரி | 19,191 | 19,191,000.00 |
| மார்ச் | 21,858 | 21,858,000.00 |
| ஏப்ரல் | 12,999 | 12,999,000.00 |
| மே | 19,989 | 19,989,000.00 |
| ஜூன் | 22,608 | 22,608,000.00 |
| ஜூலை | 22,603 | 22,603,000.00 |
| ஓகஸ்ட் | 25,225 | 25,225,000.00 |
| செப்டெம்பர் | 19,927 | 19,927,000.00 |
| ஒக்டோபர் | 22,724 | 22,724,000.00 |
| நவம்பர் | 26,365 | 26,365,000.00 |
| டிசம்பர் | 23,693 | 23,693,000.00 |
| **மொத்தம்** | **255,438** | **255,438,000.00** |



### 5.2. நடமாடும் சேவை

வாக்குகளை அளிப்பதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டதன் காரணமாக நடமாடும் சேவைகளை நடாத்தும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நடமாடும் சேவை மூலமாக தொலைதூரங்களில் வசிக்கும் மக்களிடம் சென்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. உள்ளூர் மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நடமாடும் சேவை வேலைத்திட்டங்களின் 2017 ஆம் ஆண்டில் **22,088** அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அது கிடைக்கப்பெற்ற மொத்த விண்ணப்பங்களின் 90% வீதமாகும்.

| தொடர் இலக்கம் | திகதி | அமைப்பு / அனுசரனை வழங்கிய நிறுவனங்கள் | இடம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 1/7/2017 | உள்நாட்டலுவல்கள் அமைச்சு | நாகொடை பிரதேச செயலகம் | **720** |
| 2 | 2017/01/10-11 | பிரவுன்ஸ் நிறுவனம் | பிரவுன்ஸ் நிறுவன வளாகத்தில் | **87** |
| 3 | 1/12/2017 | வீடமைப்பு மற்றும் நிர்மானத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ அவர்கள் மற்றும் லுணுகம்வெஹெர பிரதேச செயலகம் | லுணுகம்வெஹெர வீரவில புதிய நகரம், துரு செவன அருகில் “கஜசமரகம” வீடமைப்பு பகுதியில் | **108** |
| 4 | 1/14/2017 | உள்நாட்டலுவல்கள் அமைச்சு | அதிகாரபூர்வ பணி நிறைவு வேலைத்திட்டம் - காலி | **318** |
| 5 | 1/20/2017 | களணி பிரதேச செயலகம் | களணி பிரதேச செயலகத்தில் | **96** |
| 6 | 1/28/2017 | சித்தமுல்லை முன்னேற்ற கலாச்சார மன்றம் மற்றும் ஹோமாகம பிரதேச செயலகம் | சித்தமுல்லை மத்தும பண்டார கனிஷ்ட வித்தியாலயத்தில் | **126** |
| 7 | 1/29/2017 | சிவில் பாதுகாப்புக் குழு - வெலிவேரிய | ஸ்ரீசுகதாராம புராதன விஹாரையில் | **114** |
| 8 | 2/3/2017 | இலங்கை மகளீர் வழக்கறிஞர்கள் சங்கம் - அவிசாவளை | அவிசாவளை நீதிமன்ற கட்டிட தொகுதியின் வழக்கறிஞர் ஓய்வுகூடத்தில் | **65** |
| 9 | 2/3/2017 | வீடமைப்பு மற்றும் நிர்மானத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ அவர்கள் மற்றும் சூரியவெவ பிரதேச செயலகம் | வெலிவெவ கிராமத்தில் | **144** |
| 10 | 2/17/2017 | திஸ்ஸமஹாராம பிரதேச செயலகம் | திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தில் | **610** |
| 11 | 2/17/2017 | புளத்சிங்கள பிரதேச செயலகம் | புளத்சிங்கள பிரதேச செயலகத்தில் | **802** |
| 12 | 2/22/2017 | இலங்கை முதலீட்டுச் சபை – பியகம வலயம் | நிறுவன வளாகத்தில் | **46** |
| 13 | 2/23/2017 | வீடமைப்பு மற்றும் நிர்மானத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ அவர்கள் மற்றும் திஸ்ஸமஹாராம பிரதேச செயலகம் | சிறிஜய கிராமத்தில் | **42** |
| 14 | 2/28/2017 | மதுராவெல பிரதேச செயலகம் | மதுராவெல பிரதேச செயலகத்தில் | **658** |
| 15 | 3/8/2017 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | அம்பலாங்கொடை தர்மாஷோக வித்தியாலயத்தில் | **17** |
| 16 | 3/10/2017 | எயார்டெல் லங்கா தனியார் கம்பனி | நிறுவன வளாகத்தில் | **20** |
| 17 | 3/14/2017 | இலங்கை பரீட்சைகள் திணைக்களம் | நிறுவன வளாகத்தில் | **72** |
| 18 | 3/16/2017 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு, 1 ஆம் மாடி, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01. | களுத்துறை மாவட்டம் - மிரிஸ்வத்தை தோட்டம் | **41** |
| 19 | 3/19/2017 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | திருகோணமலை நகரம் மற்றும் கடவத்சத்தர பிரதேச செயலகம் | **134** |
| 20 | 3/21/2017 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு, 1 ஆம் மாடி, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01. | நுவரேலிய மாவட்டம் - வவர்லி தோட்டம் | **54** |
| 21 | 3/23/2017 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு, 1 ஆம் மாடி, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01. | இரத்தினபுரி மாவட்டம் - அன்தான தோட்டம் | **41** |
| 22 | 3/30/2017 | அலுத்கடை நீதிமன்ற வளாகம் | வழக்கறிஞர் சங்கத்தில் | **25** |
| 23 | 4/3/2017 | இலங்கை இராணுவம் | 683 விஷ்வமடு படையணி தலைமையகம் | **75** |
| 24 | 4/7/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | குரு/கணேவத்தை எஸ்.பீ.ஹேரத் தேசிய பாடசாலை | **268** |

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | 4/8/2017 | வெல்லம்பிட்டிய – பொலிஸ் | சேதவத்தை சித்தார்த்த வித்தியாலயம் | 142 |
| 26 | 4/22/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | வவுனியா நெடுங்கேணி வித்தியாலயம் | 246 |
| 27 | 4/23/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | வவுனியா வெற்றிகுளம் | 310 |
| 28 | 4/29/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | வவுனியா பிரதேச செயலகம் | 83 |
| 29 | 4/30/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | வவுனியா பிரதேச செயலகம் | 293 |
| 30 | 5/4/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | நிறுவன வளாகத்தினுள் | 48 |
| 31 | 5/6/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | எகட்டுவெவ பிரதேச செயலகம் | 212 |
| 32 | 5/20/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | கண்டாவெளி | 465 |
| 33 | 5/20/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | பச்சிளப்பள்ளி | 205 |
| 34 | 5/22/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | புதுக்குடியிருப்பு பிரதேச | 548 |
| 35 | 6/7/2017 | கொழும்பு பங்குச் சந்தை | நிறுவன வளாகத்திற்குள் | 24 |
| 36 | 6/10/2017 | நொச்சியாகம பிரதேச செயலகம் | நொச்சியாகம பிரதேச செயலக வளாகம் | 254 |
| 37 | 6/24/2017 | கெப்பட்டிகொல்லாவ | கெப்பட்டிகொல்லாவ மத்திய மகா வித்தியாலயம் | 207 |
| 38 | 6/24/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | நாரம்மல பிரதேச செயலகம் | 316 |
| 39 | 6/25/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | வீரம்புகெதர டீ.எஸ். சேனானாயக்க | 315 |
| 40 | 6/30/2017 | இலங்கை வங்கி | இலங்கை வங்கி தலைமையகத்தில் | 220 |
| 41 | 7/6/2017 | மாஸ் அக்டிவ் கன்டுவர் லயின்(நிறுவனம்) | மாஸ் அக்டிவ் கன்டுவர்லயின் | 81 |
| 42 | 7/15/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | யு.பீ.வன்னிநாயக்க பாடசாலை (கல்கமுவ) | 1262 |
| 43 | 7/16/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | மஹுவ விஜயபா தேசிய பாடசாலை (மஹுவ) | 279 |
| 44 | 7/16/2017 | பய்ஸர் முஸ்தபா அமைச்சர் அவர்கள் (மருதானை) | மட்டக்குளிய ஸ்ரீவிக்கிரமபுர ஜனசெவன | 36 |
| 45 | 7/20/2017 | உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் | புத்தளம் பொலிஸ் நிலையம் | 131 |
| 46 | 7/22/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | கொபெய்கனே தேசிய பாடசாலை (கொபெய்கனே) | 534 |
| 47 | 7/23/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | மாவத்தகம தேசிய பாடசாலை | 280 |
| 48 | 7/29/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | குளியாப்பிட்டிய – மேற்கு (சாராநாத் வித்தியாலயம்) | 90 |
| 49 | 7/30/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | ரஸ்நாயக்கபுர - மகா வித்தியாலயம் | 280 |
| 50 | 8/5/2017 | நுமாடும் சேவை (கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையம்) | புனித மரியாள் வித்தியாலயம் | 35 |
| 51 | 8/5/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | பண்டுவஸ்நுவர – மேற்கு | 442 |
| 52 | 8/6/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | மாஸ்பொத்த | 152 |
| 53 | 8/11/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | நீதிமன்ற மாவத்தை ஸ்ரீபோதிராஜாராமய | 4 |
| 54 | 8/12/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை (கிளிநொச்சி) | கரச்சி (பி/செ.) | 326 |
| 55 | 8/13/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை (கிளிநொச்சி) | பூநகரி பிரதேச செயலகம் | 375 |
| 56 | 8/12/2017 | நடமாடும் சேவை (ராகம பொலிஸ்) | சர்வதேச பௌத்த நிலையம் | 171 |
| 57 | 8/13/2017 | நடமாடும் சேவை (கந்தானை பொலிஸ்) | பொல்பிட்டிமுகலான சனசமூக நிலையம் | 239 |
| 58 | 8/17/2017 | நடமாடும் சேவை (பொரல்ல பொலிஸ்) | சிரிசர உயன தொடர்மாடி மனைக் குடியிருப்பு தொகுதி | 92 |
| 59 | 8/18/2017 | நடமாடும் சேவை (கஹதுடுவ பொலிஸ்) | கிரிவத்துடுவ சனச வங்கி அலுவலகம் | 238 |
| 60 | 8/19/2017 | நடமாடும் சேவை (குருனாகலை) | பண்டுவஸ்நுவர – கிழக்கு | 410 |
| 61 | 8/20/2017 | நடமாடும் சேவை (கட்டான பொலிஸ்) | ஸ்ரீஹரிஸ்சந்திரபுர விஹாரை | 65 |
| 62 | 8/24/2017 | இலங்கை மத்திய வங்கி | இலங்கை மத்திய வங்கி | 201 |
| 63 | 8/22/2017 | ஹிக் கி/சே கலகொட மேற்கு மற்றும் கிழக்கு | கலகொட சீவலி கனிஷ்ட வித்தியாலயம் | 130 |
| 64 | 8/25/2017 | கணக்காய்வாளர் திணைக்கள நலன்புரிச் சங்கம் | கணக்காய்வாளர் திணைக்கள நலன்புரிச் சங்கம் | 59 |
| 65 | 8/25/2017 | அமைச்சர் முஸ்தபா அவர்கள் (மருதானை) | அபேகுணரத்ன மண்டபம் | 35 |
| 66 | 8/26/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை (முல்லைத்தீவு) | பிரதேச செயலகம் துனுக்காய் | 250 |

| | | | | |
|---|---|---|---|---|
| 67 | 8/27/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை (முல்லைத்தீவு) | மணலாறு (வளநகர தேசிய பாடசாலை) | 398 |
| 68 | 8/28/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை (முல்லைத்தீவு) | மரிட்டம்பத்து (பிரதேச செயலகம்) | 410 |
| 69 | 2017.09.02 | வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம் (நீர்கொழும்பு) | வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்க மண்டபம் | 107 |
| 70 | 2017.09.09 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை(மன்னார்) | மன்னார் - (அல் அஷர்வி) | 330 |
| 71 | 9/9/2017 | பா.உ. பீ.ஹரிசன் அவர்கள் | நொச்சியாகம | 367 |
| 72 | 2017.09.10 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | நாத்தாண்டி (பி.செ.) | 58 |
| 73 | 2017.09.11 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | மடு(பி.செ) | 62 |
| 74 | 9/11/2017 | பா.உ. பீ.ஹரிசன் அவர்கள் | மத்திம நுவரகம்பலாத | 131 |
| 75 | 9/12/2017 | பா.உ. பீ.ஹரிசன் அவர்கள் | மஹவிலச்சி | 320 |
| 76 | 9/23/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | ரிதிகம (ரமடபடகலடலம ம.வி) | 176 |
| 77 | 9/24/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | இப்பாகமுவ (இப்பாகமுவ ம.வி) | 303 |
| 78 | 9/30/2017 | சர்வதேச லயன்ஸ் கழகம் (காலி) | டென்சில் கொப்பேகடுவ வித்தியாலயம் | 62 |
| 79 | 9/30/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | மாந்தை(அடம்பன் தி.) | 156 |
| 80 | 10/1/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | முசலி (சிலாபத்துரை வி.) | 577 |
| 81 | 10/7/2017 | பிரதேச செயலகம் அத்தனகல்லை | பெம்முல்லை உப அலுவலகம் | 125 |
| 82 | 10/10/2017 | மேல் மாகாண கல்வித் திணைக்களம் | மேல் மாகாண கல்வித் திணைக்களம் | 121 |
| 83 | 10/14/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | பன்னலை | 403 |
| 84 | 10/15/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை (குருனாகலை) | உடுபத்தாவ | 182 |
| 85 | 10/15/2017 | விலிம்புல ஐக்கிய (மஹர) விற்பனைச் சங்கம் | விலிம்புல (கனிஷ்ட வித்தியாலயம்) | 172 |
| 86 | 10/21/2017 | அத்தனகல்லை பி.செ. | வல்பொல ஸ்ரீசுமணாராமய | 82 |
| 87 | 10/28/2017 | அத்தனகல்லை பி.செ. | ரனிஸ்ஸவல விஹாரை | 140 |
| 88 | 10/28/2017 | பாலித்த தெவரப்பெரும அவர்கள் | புலத்சிங்கள பி.செ. | 470 |
| 89 | 10/28/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை | நிக்கவெரட்டிய (நி.மஹசென் வித்தியாலயம்) | 116 |
| 90 | 10/29/2017 | நாலந்தை கனிஷ்ட பழைய மாணவர் சங்கம் | நாலந்தை கனிஷ்ட பழைய மாணவர் சங்கம் | 37 |
| 91 | 10/29/2017 | அத்தனகல்லை பி.செ. | பிட்டியேகெதர ம.வி. | 270 |
| 92 | 10/29/2017 | அதிகாரபூர்வ பணி நடமாடும் சேவை (குருனாகலை) | பமுணாகொட்டுவை பி.செ. | 294 |
| 93 | 10/29/2017 | பாலித்த தெவரப்பெரும அவர்கள் | மதுராவெல பி.செ. | 252 |
| 94 | 11/4/2017 | அத்தனகல்லை பி.செ. | மீவல சனசமூக நிலையம் | 150 |
| 95 | 11/4/2017 | சர்வதேச லயன்ஸ் கழகம் (பிலியந்தலை) | கெஸ்பேவ | 73 |
| 96 | 11/10/2017 | பிரண்டிக்ஸ் அபரல் நிறுவனம் (ரத்மலானை ) | பிரண்டிக்ஸ் அபரல் நிறுவனம் (ரத்மலானை ) | 79 |
| 97 | 11/11/2017 | பெந்தோட்டை பி.செ. | பெந்தோட்டை பி.செ. | 1250 |
| 98 | 11/15/2017 | மாஸ் அக்டிவ் ஷடோ லயின் (கட்டுநாயக்க) | மாஸ் அக்டிவ் ஷடோ லயின் (கட்டுநாயக்க) | 60 |
| 99 | 11/12/2017 | சர்வதேச லயன்ஸ் கழகம் | பிபிலை (நீலகிரி விஹாரை) | 150 |
| 100 | 11/18/2017 | இலங்கை டெலிகொம் மொபிடெல் | ஹோமாகம (பி.செ.) | 437 |
| 101 | 11/21/2017 | அரச செய்திகள் திணைக்களம் | அரச செய்திகள் திணைக்களம் | 70 |
| 102 | 11/21/2017 | தொடங்கொடை பி.செ. | தொடங்கொடை பி.செ. | 110 |
| 103 | 11/25/2017 | பஹலயாகொட (கம்பஹ பி.செ.) | சுகதானந்தனாராமய கம்பஹ | 95 |
| 104 | 11/26/2017 | பாலித்த தெவரப்பெரும அவர்கள் | பாலிந்தநுவரத பி.செ. | 958 |
| 105 | 11/26/2017 | ஜோன் ஈ.ஏ.அமரதுங்க அவர்கள் | வத்தளை பி.செ. | 75 |
| 106 | 12/1/2017 | லயன்ஸ் கழகம் | கெஸ்பேவ பி.செ. | 70 |
| 107 | 12/4/2017 | மகளீர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு | நாச்சதுாவ பி.செ.(அநுராதபுரம்) | 82 |
| 108 | 12/6/2017 | பிரண்டிக்ஸ் அபரல் நிறுவனம் (ரத்மலானை ) | ரத்மலானை | 111 |
| | **மொத்தம்** | | | **24659** |

## 5.3. பொதுவான சேவை

2017 ஆம் ஆண்டு ஜனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31 வரையான காலப்பகுதியில் பொதுவான சேவைகளின் கீழ் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.

| மாதம் | கிடைத்தவிண்ணப்பங்களின் எண்ணிக்கை | வழங்கியஅடையாளஅட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜனவரி | 42,113 | 36,432 |
| பெப்ரவரி | 37,258 | 10,841 |
| மார்ச் | 77,363 | 114,873 |
| ஏப்ரல் | 78,941 | 52,174 |
| மே | 81,387 | 74,005 |
| ஜுன் | 106,238 | 69,448 |
| ஜுலை | 89,525 | 66,029 |
| ஓகஸ்ட் | 67,628 | 59,313 |
| செப்டெம்பர் | 46,737 | 62,129 |
| ஒக்டோபர் | 36,363 | 102,329 |
| நவம்பர் | 43,023 | 73,364 |
| டிசம்பர் | 42,103 | 41,294 |
| **மொத்தம்** | **748,679** | **762,231** |




**கவனிக்க**: சில மாதங்களில் கிடைத்த விண்ணப்பங்களது எண்ணிக்கை மற்றும் வழங்கிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கைக்கு இடையிலான வேறுபாடுகளுக்கான காரணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- 2016 ஆம் ஆண்டில் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு மீதமாக இருந்த விண்ணப்பப்படிவங்கள்.
- குறைபாடுகளுள்ள விண்ணப்பப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை.
- வயது பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்பத்திரங்கள்.
- போலியான விண்ணப்பப்பத்திரங்களை சமர்ப்பித்தல்.



அச்சிடப்பட்டுக் கொண்டிருக்கின்ற அடையாள அட்டைகளது புகைப்படமாகும்.

## 6. சட்டரீதியான முன்னேற்றம்

1968 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின்படி (2016 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கத்தையுடைய திருத்தப்பட்ட சட்டம்) சட்ட பிரிவில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் கீழே தரப்பட்டுள்ளது.

- எந்தவொரு நபரும் 2016 ஆம் ஆண்டு 8ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் (திருத்தப்பட்ட) சட்டத்தின் 44(1) அ,ஆ,இ,ஈ,உ ஆகிய பிரிவுகளின்படி புரியப்பட்ட குற்றங்கள் தொடர்பாக விசாரணையொன்று நடத்தப்பட்டு உரிய சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுதல்.
- சட்டத்தின் 39 அ(1) பிரிவின்படி ஆணையாளர் நாயகத்திற்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு உரிய தகவல்களை எழுத்து மூலம் முன்வைக்குமாறு எந்தவொரு நபருக்கும் அறிவிப்பதற்குரிய அதிகாரத்தைப் பிரயோகித்தல்.
- 39(இ) பிரிவின்படி நீதிமன்றத்தினுடைய எழுத்து மூலமான கோரிக்கையின் பிரகாரம் தேசிய அடையாள அட்டை உரிமையாளரொருவர் தொடர்பான தகவல்களின் உண்மைத்தன்மையினை உறுதிப்படுத்துதல்.
- 39 (ஈ) பந்தியினடிப்படையில் ஒரு நிறுவனத்தினால் கோரப்படுகின்ற எழுத்துமூலமான கோரிக்கையின் அடிப்படையில் தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பவர் தொடர்பான விபரங்களது உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துதல்.

அதன்படி, 2017 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| இல: | செயற்பாடுகள் | பெற்றுக்கொண்ட கடிதங்கள் / விண்ணப்பங்கள் | வேலை முடிவுறுத்தப்பட்ட கடிதங்கள் / விண்ணப்பங்கள் | மொத்தச் செயற்பாடுகள் விண்ணப்பங்கள் / கடிதங்கள் |
|---|---|---|---|---|
| 01 | **பிரச்சினைமிக்க விண்ணப்பப்படிவங்கள்**<br>I. இரட்டை விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் (மூல விண்ணப்பப்படிவங்கள் இரண்டு அல்லது அதற்கும் மேலான எண்ணிக்கையில் விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்)<br>II. ஒரே அடையாள அட்டை இலக்கத்திற்கு ஒன்றிற்கொன்று மாறுபட்ட நபர்களது புகைப்படம் ஒட்டப்பட்டிருத்தல்.<br>III. திருத்தியமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களுடன் சிதைந்த அடையாள அட்டைகள் மற்றும் வேறு நபர்களுக்குச் சொந்தமான அடையாள அட்டைகளைச் சமர்ப்பித்தல்.<br>IV. போலியான பிறப்புச் சான்றிதழ்களை சமர்ப்பித்தல்.<br>V. விண்ணப்பப்படிவங்களுடன் முன்வைக்கப்படுகின்ற சந்தேகத்திற்கிடமான பிறப்புச் சான்றிதழ்களை பரிசோதிப்பதற்காக பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு அனுப்புதல். | 5092 | 3379 | 1713 |
| 02 | I. வெளிநாட்டிலுள்ளவர்கள் அல்லது வெளிநாட்டிற்குச் செல்லவிருப்பவர்களுக்குத் தேவையான பொலிஸ் இசைவு அனுமதிக்கான அடையாள அட்டை இலக்கங்களை உறுதிப்படுத்துதல்<br>II. அடையாள அட்டை இலக்கங்களை உறுதிப்படுத்துதல் - கடிதங்கள் | 37633<br>662 | 37633<br>662 | -<br>- |
| 03 | **அடையாள அட்டை இலக்கங்களை உறுதிப்படுத்துதல்.**<br>I. அடையாள அட்டை இலக்கங்களை உறுதிப்படுத்தும் பொதுமக்கள் கோரிக்கை (மூல விண்ணப்பப்படிவங்களுக்கு)<br>II. பாதுகாப்புப் பிரிவிற்கு<br>- (பொலிஸ் நிலையங்கள், குற்றப் புலனாய்வுத் திணைக்களம், பயங்கரவாத விசாரணை மற்றும் ஏனைய பாதுகாப்பு பிரிவுகள்)<br>- பொலிஸ் செய்திகள்<br>III. அரச மற்றும் தனியார் வங்கிகள், தொழில் திணைக்களம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், தேர்தல்கள் திணைக்களம்)<br>IV. வெளிநாட்டு முகவர் நிறுவனங்கள், IOM, வெளிநாட்டுத் தூதரகங்கள், உயர் ஸ்தானிகராலயங்கள்.<br>V. நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற அடையாள அட்டை தொடர்பான விசாரணைகள் | 189<br>2626<br>260<br>6421<br>33<br>116 | 117<br>2626<br>240<br>6349<br>33<br>116 | 72<br>-<br>20<br>72<br>-<br>- |
| 04 | போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து அடையாள அட்டைகளைத் தயாரிப்பதற்குரிய விண்ணப்பங்கள் தொடர்பாக முறையான விசாரணைகளை நடாத்துவதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் ஊழல் புலனாய்வுப் பணியகத்திற்கு அனுப்புதல். . | 57 | - | 57 |

# 7. நிதிசார் முன்னேற்றம்

## 7.1. செலவீன மதிப்பீடு மற்றும் செலவுகள்

| இல | செலவு விபரம் | செயற்பாடுகள் | செலவீன மதிப்பீடு 1017 (ரூ.ஆயிரம்) | முன்னேற்றம் (ரூ.ஆயிரம்) | | % |
|---|---|---|---|---|---|---|
| | | **மீண்டெழும் செலவுகள்** | | | | |
| 1 | | தனிநபர் வேதனாதிகள் | 569,402 | நிதிசார் | 567,706 | 99.7% |
| | | | | பௌதீக | | |
| 2 | | வேறு மீண்டெழும் செலவீனங்கள் | 178,115 | நிதிசார் | 177,097 | 99.4% |
| | | | | பௌதீக | | |
| | | **மீண்டெழும் செலவீனங்களது மொத்தம்** | **747,517** | | **744,803** | 99.6% |
| | | **மூலதன செலவீனங்கள்** | | | | |
| | | **மூலதனச் சொத்துக்களது புணரமைப்பு மற்றும் மேம்படுத்தல்கள்** | | | | |
| 3 | 2001 | கட்டிடங்களும் நிருமாணிப்புகளும் | 4,000 | நிதிசார் | 1,146 | 28.7% |
| | | | | பௌதீக | 3 | 100% |
| 4 | 2002 | இயந்திரங்களும் உபகரணங்களும | 1000 | நிதிசார் | 983 | 98.3% |
| | | | | பௌதீக | 7 | 100% |
| 5 | 2003 | வாகனங்கள் | 1500 | நிதிசார் | 1,315 | 87.7% |
| | | | | பௌதீக | 5 | 100% |
| | | **மூலதனச் சொத்துக்களை பெற்றுக் கொள்ளுதல்.** | | | | |
| 6 | 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 4,000 | நிதிசார் | 1,995 | 49.90 |
| | | | | பௌதீக | 48 | 100% |
| 7 | 2103 | இயந்திரங்களும் பொறிமுறைகளும் | 2,000 | நிதிசார் | 1,760 | 88.0% |
| | | | | பௌதீக | 8 | 100% |
| | | **மனித வள அபிவிருத்தி** | | | | |
| 8 | 2401 | ஆளனிப் பயிற்சி | 1,500 | நிதிசார் | 1,498 | 99.9% |
| | | | | பௌதீக | 16 | 100% |
| | | **வேறு மூலதனச் செலவீனங்கள்** | | | | |
| 9 | 2505 | **கொள்முதல் நடவடிக்கைக்குரிய ஆரம்ப வேலைகள்** | 200 | நிதிசார் | 0 | 0% |
| | | | | பௌதீக | | |
| 10 | 2509 | வேறு | 56,500 | நிதிசார் | 56,500 | 100% |
| | | | | பௌதீக | *1,680,685 | 100% |
| | | **மூலதனச் செலவுகளது மொத்தம்** | **70,700** | நிதிசார் | **65,197** | 92% |
| | | | | பௌதீக | | |
| | | **மொத்தம்** | **818,217** | நிதிசார் | **810,000** | 99% |

| | | |
|---|---|---|
| * பாதுகாப்பு வெற்று அட்டைகள | = | 500,000 |
| லெமினேட்டிங் சுருள்கள் | = | 3,440 |
| அட்டைகளை அச்சிடுதல் | = | 1,177,245 |
| | | **1,680,685** |

## 7.2. வருமான மதிப்பீடு மற்றும் வருமானங்கள்

| **வருமானங்கள்** | **வருமான மதிப்பீடு** | **2017.12.31 ஆம் திகதியில்** |
|---|---|---|
| ஒரு நாள் சேவை வருமானம் | 220,000,000.00 | 255,438,000.00 |
| தண்டப்பணம் | 12,000,000.00 | 24,472,009.00 |
| முத்திரை வருமானம் | 8,000,000.00 | 9,884,889.00 |
| **மொத்தம்** | **240,000,000.00** | **289,794,898.00** |

## 8. பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள்

- இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்களது வினைத்திறனை அதிகரிக்கும் நோக்குடன் அவர்கள் 2017ஆம் வருடம் முழுவதும் பல்வேறு பயிற்சித் திட்டங்களில் பங்குபற்றச் செய்யப்பட்டார்கள். அதன் மூலம் திணைக்களத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாகவும் பொதுமக்களுக்கு மிக விரைவான சேவைகளைப் பெற்றுக் கொடுக்கவும் எதிர்பார்க்கப்பட்டது.
- 2017ஆம் ஆண்டில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொண்ட பயிற்சிகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| இலக்கம் | செயற்பாடு | செலவு மதிப்பீடு (ரூ.ஆயிரம்) | முன்னேற்றம் (ரூ.ஆயிரம்) | |
|---|---|---|---|---|
| 1 | அரச கரும மொழிகள் பயிற்சி | 511 | நிதிசார் | 379.000 |
| | | | பௌதீக | 84 * |
| 2 | பட்டப் பின்படிப்பு பாடநெறி பயிற்சி | 430 | நிதிசார் | 441.500 |
| | | | பௌதீக | 2 * |
| 3 | கணனி வலையமைப்பு தொடர்பான பயிற்சி | 284 | நிதிசார் | 309.000 |
| | | | பௌதீக | 4 * |
| 4 | ஆவணங்களை அடையாளங் காணும் பயிற்சி | 50 | நிதிசார் | 182.775 |
| | | | பௌதீக | 315 * |
| 5 | நீதிமன்ற கடமைகள் தொடர்பான பயிற்சி | 25 | நிதிசார் | 61.600 |
| | | | பௌதீக | 82 * |
| 6 | சேவை ஆரம்பப் பயிற்சி | - | நிதிசார் | 25.150 |
| | | | பௌதீக | 53 * |
| 7 | பெறுகை நடைமுறைகள் தொடர்பான பயிற்சி | - | நிதிசார் | 27.500 |
| | | | பௌதீக | 1 * |
| 8 | உற்பத்தி உதவியாளர் மற்றும் ஆவண உதவியாளர் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | - | நிதிசார் | 43.625 |
| | | | பௌதீக | 5 * |
| 9 | வாகன முகாமைத்துவப் பயிற்சி | - | நிதிசார் | 6.000 |
| | | | பௌதீக | 1 * |
| 10 | வருடாந்த களஞ்சிய சுற்றாய்வுப் பரீட்சை | - | நிதிசார் | 12.000 |
| | | | பௌதீக | 2 * |
| 11 | தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தில் பயிற்சி | - | நிதிசார் | 10.000 |
| | | | பௌதீக | 2 * |
| 12 | திணைக்களத்தின் கணனி கட்டமைப்பு சார் பிரச்சினைகள் தொடர்பான பயிற்சி | 200 | நிதிசார் | நடாத்தப்பட வில்லை |
| | | | பௌதீக | |
| **மொத்தம்** | | 1500 | | 1,498.150 |

* பயிற்சிநெறியில் பங்குபற்றியோர் எண்ணிக்கை

## 9. ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்

- 2003ஆம் ஆண்டு தொடக்கம் விண்ணப்பதாரிகளின் கோரிக்கைக்கமைய ஒரே நாளில் அடையாள அட்டைகளை வழங்கும் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

- இந்த ஒரே நாள் சேவையில் ஈடுபடும் ஆளனியினருக்கு முறையான அனுமதியின் அடிப்படையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 2017ஆம் ஆண்டிலும் இவ்வூக்குவிப்புக் கொடுப்பனவு முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

## 10. உள்ளகக் கணக்காய்வு

- 2016 ஆம் ஆண்டில் வாகனப் பயன்பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுதல்.
- 2016ஆம் ஆண்டில் ஆளனியினரது விடுமுறை தொடர்பான கணக்காய்வினை மேற்கொள்ளுதல்.
- e-NIC கருத்திட்டத்திற்குரித்தான 2016ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் தொடக்கம் 2017 ஓகஸ்ட் வரை உரிய உறுதிச்சீட்டுக்களை பரிசோதனை செய்தல்.
- 2017 ஜனவரி தொடக்கம் செப்டெம்பர் வரை திணைக்களத்தின் உறுதிச்சீட்டுக்களைப் பரிசோதித்தல்.
- 2017 ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரை திணைக்கள மாதாந்த கணக்கு அறிக்கையும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றையும் ஆய்வு செய்தல்.
- அச்சிடப்பட்ட 52 அட்டைகள் காணாமற் போனமை தொடர்பான கணக்காய்வு.
- போலி அடையாள அட்டையொன்றைத் தயாரித்தது தொடர்பான விசாரணை.
- 04 முறைப்பாடுகளுக்குரிய விசாரணைகள்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் 06இணை நடாத்துதல்.
- 2017ஆம் ஆண்டின் குறைபாடுகளுடன் அச்சிடப்பட்ட அட்டைகள் தொடர்பான பரிசோதனைகள்.
- 2017ஆம் ஆண்டில் வாகன ஓட்டப் பதிவுக் குறிப்பு மற்றும் திருத்தங்கள் தொடர்பான பரிசோதனைகள்.
- கம்பஹா மாவட்டத்தின் 08 பிரதேச அலுவலங்களைப் பரிசோதித்தமை.
- அச்சிடப்பட்ட அடையாள அட்டைகள் பதிவுத் தபாலுக்கு அனுப்புதல் தொடர்பான பரிசோதனைகள்.
- CD841246 விண்ணப்பப்படிவம் தொடர்பான ஆரம்ப விசாரணை அறிக்கை.
- சிறு கட்டுநிதி தீர்ப்பனவை தாமதப்படுத்துதல் தொட்பான பரிசோதனை.
- 2017.11.15ஆந் திகதி தொடக்கம் குறைபாடுகளைக் கொண்ட தேசிய அடையாள அட்டைகள் தொடர்பான அறிக்கை.

## 11. ஆளணி தொடர்பான விபரங்கள்

### 11.1. புதிய நியமனங்கள்

- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் உத்தியோகத்தர்கள் -35
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்கள் -12
- அலுவலகப் பணியாளர் சேவையினர் -13

### 11.2. சேவையிலிருந்து விலகுதல்

- இலங்கை நிருவாக சேவையின் உத்தியோகத்தர் -01
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை III தரத்தின் உத்தியோகத்தர்கள் -02
- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை -04
- அலுவலகப் பணியாளர் -01

### 11.3. இடமாற்றம்

- இலங்கை நிருவாக சேவையின் உத்தியோகத்தர்கள் 02 பேர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்கள் 17 பேர் இடமாற்றம் பெற்று வந்துள்ளதுடன் 07 பேர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர் .
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் II உத்தியோகத்தர்கள் 04 பேர் இடமாற்றம் பெற்று வந்துள்ளதுடன் 02 பேர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 10 பேர் இடமாற்றம் பெற்று வந்துள்ளதுடன் 17 பேர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.
- அமுலாக்க உத்தியோகத்தர் சேவையின் 3 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்று வந்ததுடன் 5 பேர் இடமாற்றம் பெற்றுச் சென்னறனர்.
- அபிவிருத்தி உத்தியோகத்தர்களுள் 20 பேர் இடமாற்றம் பெற்று வந்ததுடன் 16 பேர் இடமாற்றம் பெற்றுச் சென்றனர்.
- தகவல் தொழிநுட்ப சேவையைச் சார்ந்த 01 உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்றார்.
- அலுவலகப் பணியாளர் சேவையைச் சார்ந்த ஒருவர் இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.
- சாரதி சேவையைச் சார்ந்த ஒருவர் இடமாற்றம் பெற்று வந்ததுடன் இன்னுமொருவர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

### 11.4. விடுவித்தல்கள்

- அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் தாரம் IIIஐச் சார்ந்த 03 உத்தியோகத்தர்கள்
- அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் -04

### 11.5. பதவியுயர்வுகள்

- இலங்கை நிருவாக சேவையின் தரம் IIஐச் சார்ந்த உத்தியோகத்தர்கள் இருவர் தரம் Iஇற்கு பதவியுயர்வு பெற்றுள்ளனர்.
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் IIIஐச் சார்ந்த உத்தியோகத்தர்கள் இருவர் தரம் IIஇற்கு பதவியுயர்வினைப் பெற்றமை.

### 11.6. மரணங்கள்

- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையைச் சேர்ந்த ஒருவர் மரணித்துள்ளார்.

### 11.7. ஓய்வு பெறுதல்

- அரச முகாமைத்துவ சேவை தரம் I உத்தியோகத்தர்கள் 04
- அரச முகாமைத்துவ உதவியாளர் தரம் II உத்தியோகத்தர்கள் 02
- சாரதி சேவை உத்தியோகத்தர்கள் 01
- உற்பத்தி உதவியாளர் சேவை உத்தியோகத்தர்கள் 01

திணைக்களத்தின் ஆளணி தொடர்பான விபரங்கள் இணைப்பு Iஇல் காட்டப்பட்டுள்ளது.

## 12. பௌதீக வளங்களது முகாமைத்துவம்

### 12.1 காணி மற்றும் கட்டிடங்கள்

- ஆரம்பத்திலிருந்து 2016.09.25 வரை இத்திணைக்களத்தில் தாபிக்கப்பட்டிருந்த இலக்கம் 38 கெப்பட்டிபொல வீதி, கொழும்பு 05 என்ற கட்டிடத்தை அமைச்சரவை செயலகத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தற்போது இத்திணைக்களத்தில் தாபிக்கப்பட்டுள்ள 139,458 சதுரடி சுஹுருபாய கட்டிடத்திற்கு மாதாந்தம் ரூ.18,684,500.44 தொகையை அரச பாதுகாப்பு அமைச்சிற்கு கொடுப்பனவு செய்யப்படுகின்றது.

- இத்திணைக்களத்தின் கிளை அலுவலகமொன்றை அமைப்பதற்காக நுவரேலியா, ஹாவாஎலிய பிரதேசத்தில் லேடிமெக்கலம் வீதியில் 0.1710 ஹெக்டேர் காணியொன்று நுவரேலியா பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் தற்போது அதனை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- திணைக்களத்தின் விண்ணப்பப் பத்திரங்களை களஞ்சியப்படுத்துவதற்காக நுகேகொடையில் அமைந்துள்ள 12,180 சதுரடியைக் கொண்ட கட்டிடமானது அனைத்து வரித்தொகையுடன் ரூ.826562.50 மாதாந்த வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

### 12.2 ஏனைய சொத்துக்கள்

தற்போது திணைக்களத்திலுள்ள வாகனங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தொடர் இல: | வாகன இலக்கம் | வகை | பெயர் | கொள்வனவு செய்யப்பட்ட வருடம் | கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | WP PE - 1266 | TOYOTA | டபள் கெப் | 2012.06.12 | 7,500,000.00 |
| 2 | WP KB - 8577 | NISSAN | கார் | மூல ஆவணங்கள் அரச பாதுகாப்பு அமைச்சில் உள்ளது. | 3,400,000.00 |
| 3 | WP NA - 2147 | MITSUBISHI | வேன் | 2007.12.17 | 4,450,000.00 |
| 4 | WP KX - 7866 | NISSAN | கார் | 2014.02.10 | 9,390,000.00 |
| 5 | WP PF - 7780 | MITSUBISHI | டபள் கெப் | 2015.01.29 | 6,390,000.00 |
| 6 | WP PC - 3265 | MAHINDRA | டபள் கெப் | 2011.08.18 ஆந் திகதி அ.பா.அமைச்சிலிருந்து பெற்ற வாகனமாகும். | 2,627,353.00 |
| 7 | WP KP - 5832 | MAHINDRA | ஜீப் | 2006.05.24 ஆந் திகதி அ.பா.அமைச்சிலிருந்து பெற்ற வாகனமாகும். | 4,587,528.00 |
| 8 | WP PB - 6775 | MITSUBISHI | வேன் | 2006.11.22 | 6,250,000.00 |
| 9 | WP PA - 9855 | MITSUBISHI | வேன் | 2006.05.24 | 4,250,000.00 |
| 10 | WP CAN - 7833 | NISSAN | கார் | 2015.12.18 | 5,795,000.00 |
| 11 | WP CAN - 6891 | NISSAN | கார் | 2015.12.18 | 5,795,000.00 |
| 12 | WP KF - 6282 | TATA | கார் | 2008.09.02 (2016.08.01 ஆந் திகதி கருத்திட்டத்தின் மூலமாக இத்திணைக்களத் திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ) | 1,935,000.00 |
| 13 | WP WP - 6059 | TVS | மோட்டார் சைக்கிள் | 2011.05.31 | 104,496.00 |
| 14 | WP ND - 0435 | NISSAN | வேன் | 2017.08.31 ஆந் திகதி திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட |

## 13. e – NIC செயற்திட்டம்.

**கருத்திட்டத்தின் நோக்கம் / குறிக்கோள்**

- 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பிரஜைகளது தகவல்கள், உயிரியல் மெட்ரிக் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட தேசிய பிரஜைகள் தரவுக் கட்டமைப்பொன்றைத் தாபித்தல்.

- தற்போது பயன்படுத்தப்படுகின்ற தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக தனிப்பட்ட அடையாளத்தினை மிகத் துல்லியமாக உறுதிப்படும் விதத்தில் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை விநியோகித்தல்.

- தேசியப் பாதுகாப்பிற்கும் நாட்டின் அபிவிருத்தி செயற்பாட்டிற்கும் தேவையான வசதிகளை வழங்குதல்.

## 13.2 கருத்திட்டத்தின் பிரதான செயற்பாடுகள்

- தரவுகளை சேகரிக்கும் நடவடிக்கைகளுக்காக ஆட்பதிவுத் திணைக்களத்தின் கிளை அலுவலகங்களை வழிநடத்தும் நிலையங்களாக தாபித்தல் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைத் தயாரித்தல்.
- தற்போதுள்ள அடையாள அட்டைகளை புதிய வடிவத்தில் கையடக்க அட்டையில் வழங்குதல்.
- தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- தரவுகளை சேகரிக்கும் திட்டத்தினை ( Data Capturing Programme) நடைமுறைப்படுத்துதல்.
- தரவுகளை இலத்திரனியல்மயப்படுத்துதல் (Data Digitizing) மற்றும் தரவுகளை உறுதிப்படுத்துதல் (Data Verification)
- பிரஜைகளது தகவல்கள் மற்றும் உயிரியல் மெட்ரிக் தரவுகள் மற்றும் ICAO நியமங்களுக்கமைய பெறப்பட்ட புகைப்படம் உள்ளிட்ட பிரஜைகள் தரவுக் கட்டமைப்பைத் தாபித்தல்.
- இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை வழங்குதல்.
- தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ளும் மற்றும் தகவல்களை உறுதிப்படுத்தும் முறைகளை தாபித்தல்.

| இல: | செயற்பாடுகள் | செலவு மதிப்பீடு (ரூ.மில் லியன்) | முன்னேற்றம் (ரூ.மில்லியன்) | | % |
|---|---|---|---|---|---|
| 1 | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்குதல் தொடர்பான ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தில் உரிய திருத்தங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல். | - | மூலதனம் | - | - |
| | | | பௌதீகம் | ➢ 1968 ஆண்டின் 32ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு 2016.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது.<br>➢ மேற்குறிப்பிட்ட சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்குரிய வரைபுக்கான பாராளுமன்ற அனுமதி 2017.08.22 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டது. | 100% |
| 2 | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்தில் திட்டமிட்டவாறு செயல்படுத்தப்படாத செயற்பாடுகளை தொடர்ந்து நடாத்துவதற்குரிய அனுமதி. | - | நிதி | - | - |
| | | | பௌதீகம் | ➢ தற்போது நடைமுறையிலுள்ள செயற்திட்டத்திற்கு 2015.10.07 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி பெறப்பட்டதுடன் 2017.10.31ஆம் திகதி இரண்டு வருட செயற்திட்ட காலம் முடிவடைந்ததுடன் 2017.11.01 ஆம் திகதி தொடக்கம் செயற்படும் வகையில் மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிப்பதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் | 100% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 2017.09.22 ஆம் திகதி அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினதும் கௌரவ தொலைதொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரினதும் அவதானிற்கமைய உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் மூலம் முன்வைக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஆலோசனைக்கமைய உரிய இரண்டு அமைச்சுக்களினதும் அமைச்சர்களினால் முன்வைக்கப்பட்ட ஒருங்கிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2017.12.12 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி பெறப்பட்டது. | |
| 3 | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகித்தல் தொடர்பாக ஆட்களைப் பதிவு செய்தல் திணைக்களத்தில் 331 பிரிவுகளை ஸ்தாபித்தல். | 186.2 | நிதி | 91.01 | 49% |
| | | | பௌதீகம் | ➢ ஆட்களைப் பதிவு செய்தல் திணைக்களத்தில் 331 பிரதேச அலுவலகங்களை ஸ்தாபித்தலின் கீழ் 2016 ஆம் ஆண்டில் 328 பிரதேச அலுவலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் 3 அலுவலகங்கள் பூநகரியிலும், கண்டாவளை மற்றும் மணலாறு பிரதேச செயலகங்களில் நிர்மாணித்தல்.<br><br>➢ 247 திணைக்கள பிரதேச அலுவலகங்களில் சில புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக பிரதேச செயலகங்களுக்கு நிதி வழங்குதல்.<br><br>➢ 2 திணைக்கள மாகாண அலுவலகங்களுக்கு பராமரிப்பு செலவுகளுக்காக நிதி வழங்குதல். (வடக்கு மற்றும் கிழக்கு அலுவலகங்களுக்காக)<br><br>➢ 331 திணைக்கள பிரதேச அலுவலகங்களுக்காக VPN இணைப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் செயற்பாட்டை திணைக்களத்தின் மூலம் பரிசீலனை செய்யும் திட்டத்தின் கீழ் 116 அலுவலகங்களின் பரிசீலனை நிறைவடைந்துள்ளது. மிகுதி அலுவலகங்களின் பரிசீலனை 2018 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>➢ திணைக்களத்திற்கு தேவையான QR Readers 805 கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.<br><br>➢ திணைக்கள பிரதேச அலுவலகங்களுக்கு வழங்குவதற்காக பிரஜைகளின் சுயவிபரத் தகவல்களை சேகரிப்பதற்கு தேவையான கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக்கொள்ளும் 331 இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்குரிய கேள்விமனுக் கோரல் முடிவடைந்துள்ளதுடன் 2018 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | 80% |
| 4 | 04 மாகாண அலுவலகங்களை ஸ்தாபித்தல் (தென், ஊவா, மத்திய மற்றும் வடமத்திய) | 11.0 | நிதி | 3.9 | 36% |
| | | | பௌதீகம் | ➢ திணைக்கள நடவடிக்கைகளை பிரதேச மட்டத்தில் பன்முகப்படுத்துதலின் கீழ் தென் மாகாண அலுவலகத்தினுடைய நிர்மாணிப்பு நிறைவடைந்துள்ளது. செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. | 65% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ➢ மத்திய மாகாண அலுவலகத்தினை நுவரேலியா மாவட்டத்தில் அமைப்பதற்கு தேவையான மதிப்பீடு கட்டிட திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| 5 | அனர்த்த மீட்பு தரவு மையத்தினை (DRDC) குருனாகலையில் அமைத்தல் | 0.0 | நிதி | 0.0 | - |
| | | | பௌதீகம் | அனர்த்த மீட்பு தரவு மையத்தினை குருனாகலையில் அமைப்பதற்குரிய கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் 2017 ஆம் ஆண்டில் நிறைவடைந்துள்ளது.<br>I. செயற்திட்டத்தின் தொழிநுட்ப ஆலோசகர்களின் சிபாரிசின் அடிப்படையில் குருணாகலை, வாரியபொல, வெவகெதரவத்த ஆகிய காணிகளை தெரிவுசெய்தல்.<br>II. குருணாகலை நெசவு கம்பனியிடமிருந்து 02 ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதன் நில அளவை வேலைகளும் நிறைவடைந்துள்ளது.<br>III. அனர்த்த மீட்பு தரவு நிலையத்தை (DRDC) நிர்மாணிப்பதற்கு தேவையான மதிப்பீடு மற்றும் தளவரைபு திட்டத்தினை(Layout Plan) CECB நிறுவனத்தின் மூலம் தயாரித்தல்.<br>IV. நிர்மாணிப்பதற்கு தேவையான ரூ.155 மில்லியனுக்குரிய மதிப்பீட்டறிக்கையுடன் கட்டிடத்தை அனுமதிப்பதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் 2017.09.22 ஆம் திகதி முன்வைத்தல்.<br>V. நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் கண்காணிப்பின் கீழ் 2017.12.22 ஆம் திகதி திறைசேரியின் பணிப்பாளர் நாயகம் அவர்களுடன் கலந்துரையாடுதல் மற்றும் அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கிணங்க 2018 ஆம் ஆண்டில் அமைச்சரவைப் பத்திரம் முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | 25% |
| 6 | நடைமுறையிலுள்ள அடையாள அட்டைக்குப் பதிலாக இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை அடிப்படையாகக் கொண்டு புதிய அடையாள அட்டையினை வழங்குதல் | 144.9 | நிதி | 50.5 | 35% |
| | | | பௌதீகம் | ➢ ICAO மென்பொருளை கொள்வனவு செய்வதற்குரிய கேள்விச்சபை செயற்பாடுகள் 2017.10.02 ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டன. 60 தினங்களில் ஒப்பந்த வேலைகள் முற்றுப்பெற வேண்டியிருப்பினும் கேள்வி மனுதாரர் மூலம் தேசிய கொள்ளல் சபைக்கு வேறொரு கேள்விமனுதாரரை தெரிவு செய்தமை பற்றி முன்வைக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக, தேசிய கொள்ளல் சபையின் தீர்மானம் கிடைக்கும் வரை 2017 ஆம் ஆண்டுக்குரிய ஒப்பந்தம் வழங்கப்படவில்லை.<br>➢ பிரஜைகளுக்கு ICAO தரத்துடனான புகைப்படங்களை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக நாடு முழுவதும் அமைந்துள்ள புகைப்பட நிலையங்களையுடைய 1920 புகைப்பட கலைஞர்களை பதிவு செய்தல் மற்றும் 23 பயிற்சி வேலைத்திட்டங்கள் மூலம் பயிற்சியளிக்கும் செயற்பாடுகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.<br>➢ ஏற்கனவே அச்சிடப்பட்ட 500,000 அட்டைகள் 2017.10.12 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.<br>➢ 2017.10.27 ஆம் திகதி தொடக்கம் தேசிய அடையாள அட்டையில் ஆட்களுடைய தகவல்களை, மூன்று மொழிகளிலும் (சிங்களம், | 75% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தமிழ் மற்றும் ஆங்கிலம்) கையடக்க அட்டையில் அச்சிட்டு வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டது. | |
| 7 | ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு ஆகியவற்றை பத்தரமுல்லையில் அமைந்துள்ள "சுஹுருபாய" கட்டிடத்தில் ஸ்தாபித்தல் | 110.0 | நிதி | 102.8 | 93% |
| | | | பௌதீகம் | ➢ திணைக்களத்தின் கேட்போர் கூடத்திலும் ஆணையாளர் நாயகத்தினுடைய மண்டபத்திலும் ஒலிபெருக்கி வலையமைப்பு, ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.<br><br>➢ திணைக்களத்தில் உயர் பாதுகாப்பின் கீழ் செயற்பட வேண்டிய பிரிவுகளை தெரிவு செய்து தானியங்கி உள்வருகை கட்டுப்பாட்டு வலையமைப்பொன்று அவற்றில் (Automated Entrance Controlling System) ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.<br><br>➢ திணைக்கள அலுவல்களை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக மக்கள் தொடர்பு வலையமைப்பு முட்புற அலுவலகத்திலும் ஒருநாள் சேவைப் பிரிவிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.<br><br>➢ பொதுமக்களுக்கு மிகவும் இலகுவான மற்றும் வினைத்திறன் மிக்க சேவையினை வழங்கும் நோக்கத்துடனும் உள்ளக பணிக்குழுவினருடன் தொடர்புகளை பேணுவதற்கும் திணைக்கள சூழலுக்குள் IP PABX தொலைபேசி வசதி மற்றும் தொடர்பு நிலையமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.<br><br>➢ திணைக்கள பணிகளை மேற்பார்வை செய்வதற்காக ஒவ்வொரு பிரிவிலும் CCTV கெமரா வலையமைப்பு, CCTV Display Panels பொருத்தப்பட்டு இயங்கச்செய்யப்பட்டுள்ளது.<br><br>➢ திணைக்கள சூழலில் பணியாற்றுதலை இலகுவாக்கும் பொருட்டு தேவையான தளபாடங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.<br><br>➢ அலுவலக உட்புற நிலத்திற்கு தரைவிரிப்பு (Floor carpets) இடப்பட்டுள்ளது.<br><br>➢ திணைக்களத்திற்குள் Central UPS அமைத்தல், தேவையான மேலதிக பெயர்ப் பலகைகள் பொருத்துதல் மற்றும் உள்ளக பிரிவுகளும் வெவ்வேறாக பிரிக்கப்பட்டுள்ளது. | 100% |
| 8 | தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | 224.9 | நிதி | 0.0 | - |
| | | | பௌதீகம் | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்குரிய மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்காக 2017 ஆம் ஆண்டு தொழிநுட்ப ஆலோசகர்கள், தொழிநுட்ப குழு அங்கத்தவர்கள் மற்றும் திணைக்கள பணிக்குழுவினர் மூலம் கீழ்குறிப்பிட்ட படிமுறைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.<br><br>i. பிரஜைகளின் தகவல்களை தேசிய ஆட்கள் பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கி, பதிவு செய்தல் மற்றும் அதனூடாக இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையினை விநியோகிக்கும் செயற்பாடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 50% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ii. தகவல்களை அங்கீகரித்தல் மற்றும் உறுதிசெய்தல் ஆகிய நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>ii. பயனர் தேவைப்பாட்டை கண்டறிதலுக்குரிய விவரக்குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.<br>v. மென்பொருளை உருவாக்குவதற்குரிய விவரக்குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.<br>v. கேள்விச்சபை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஆலோசனைகளுக்கான கேள்விச்சபை அறிவித்தல்கள் 2018 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் பிரசுரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>➢ திணைக்களத்திற்குள் தற்போது நடைமுறையிலுள்ள வலையமைப்பை மேம்படுத்துவதற்காக க்ளஸ்டர் சேவர் அமைப்புபொன்றை (Cluster Server System) ஸ்தாபிப்பதற்குரிய கொள்முதல் வேலைகள் நிறைவடைந்துள்ளது. உரிய ஒப்பந்தத்தை 2018.01.10 ஆம் திகதி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>➢ தலைமை தகவல் மையத்திற்கு இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு தேவையான சேவர் அமைப்பொன்றை பெறுவதற்குரிய கொள்முதல் செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளதுடன் 2018 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>➢ பிரஜைகளின் தகவல்களை தேசிய ஆட்களின் பெயர்ப்பட்டியலில் உள்ளடக்குவதற்குரிய செயற்பாடுகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக திணைக்கள பிரதேச அலுவலகங்களுக்கு 361 ஸ்கேனிங் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்குரிய கொள்முதல் வேலைகள் இறுதி கட்டத்தில் உள்ளதுடன் 2018 ஆம் ஆண்டில் முதல் அரைப் பகுதியில் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>➢ தேசிய ஆட்கள் பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள நபர்களுடைய தரவுகளை நீக்குதல் 1:1 மற்றும் 1: N என அங்கீகரிப்பதற்கு தேவையான தானியங்கு விரல் அடையாளத்தை கண்டறியும் அமைப்பொன்றை கொள்வனவு செய்வதற்குரிய கொள்முதல் பணிகள் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் கொள்முதல் நடவடிக்கைகளுக்குரிய CAPC அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதம் இணைந்த அமைச்சின் செயலாளருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | |
| 9 | தகவல் சேகரித்தல் வேலைத்திட்டம் | 35.0 | நிதி | 5.4 | 15% |
| | | | பௌதீகம் | ➢ இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைத் திட்டத்திற்கு ஏற்ப மனித உழைப்பின் மூலம் தகவல்களை சேகரிப்பதற்கு தேவையான பொருட்கள், பயிற்றப்பட்ட மனித வளம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் நாடு முழுவதும் அமைந்துள்ள பிரதேச அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ளது. தகவல்களை சேகரிப்பதற்காக, ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் | 5% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மற்றும் ஒழுங்கு விதிகளுக்குரிய சட்டஏற்பாடுகள் 2017.08.22 ஆம் திகதியே கிடைக்கக்கூடியதாக இருந்தது<br><br>➢ திருத்தப்பட்ட செயற்திட்டத்திற்குரிய அமைச்சரவை அனுமதி 2015.10.07 திகதி கிடைக்கப்பெற்றதுடன், பிரஜைகளின் தகவல்களை இலத்திரனியல் ஊடாக திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக திணைக்கள பிரதேச அலுவலகங்களுக்குத் தேவையான தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அதற்கேற்ப, 2018 ஆம் ஆண்டு முதல் அரைப் பகுதியில் தகவல்களை சேகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| 10 | தகவல் எண்முறைப் பரிமாற்றம் | 46.5 | நிதி | 0.0 | - |
| | | | பௌதீகம் | ➢ தகவல்களை எண்முறைப் பரிமாற்றம் செய்வதற்காக (Data Digitization) 2013 ஆம் ஆண்டு வழங்குனர் ஒருவரை தெரிவுசெய்துள்ளதுடன் ஒப்பந்த உடன்படிக்கை இன்னும் கைச்சாத்திடப்படவில்லை. எவ்வாறிருப்பினும், தகவல்கள் சேகரிக்கும் செயல்முறைகளுக்கான சட்டஏற்பாடு கிடைப்பதற்கு காலதாமதமானபடியால் தகவல் சேகரிப்பு செயல்முறைகளும் தாமதமடைந்துள்ளதால் திட்டமிட்டபடி தகவல் எண்முறைப் பரிமாற்றம் நிகழவில்லை.<br><br>➢ அதன்படி, டென்டர் மூலமாகவே எதிர்காலத்தில் தகவல் எண்முறைப் பரிமாற்றம் செய்வதற்குரிய சட்ட பின்னியை ஆய்வு செய்து (Project Steering Committee) அனுமதியை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. | - |
| 11 | ஆலோசகர் மற்றும் வளவாளர் கொடுப்பனவுகள் | 1.5 | நிதி | 1.3 | 85% |
| | | | பௌதீகம் | ➢ இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்திற்கான தொழிநுட்ப ஆலோசனைகள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி பாடசாலையிலும் மொரட்டுவை பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொள்ளப்பட்டன. பொறியியல் ஆலோசனைகள் பொறியியல் அலுவல்கள் தொடர்பான மத்திய பொறியியல் ஆலோசனைக் குழுவினால் (CECB) வழங்கப்பட்டுள்ளது. | 95% |
| 12 | செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் நடைமுறைப்படுத்துதல் | 40.0 | நிதி | 37.4 | 94% |
| | | | பௌதீகம் | ➢ இதன் கீழ் கருத்திட்ட முகாமைத்துவம், வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்படுத்துதல் போன்றன மேற்கொள்ளப்படுகின்றன. | 100% |
| | | **800.0** | **நிதி** | **292.3** | **37%** |
| | | | பௌதீகம் | | **64%** |

## இணைப்பு I

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடமாகவுள்ள எண்ணிக்கை | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆணையாளர் நாயகம் | 1 | 1 | - | - |
| 2 | மேலதிக ஆணையாளர் நாயகம் | 1 | 1 | - | - |
| 3 | ஆணையாளர் | 3 | 3 | - | - |
| 4 | பிரதான கணக்காளர் | 1 | 1 | - | - |
| 5 | பிரதி / உதவிப் பணிப்பாளர் | 19 | 15 | 4 | - |
| 6 | பிரதி / உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழிநுட்பம்) | 1 | - | 1 | - |
| 7 | கணக்காளர் | 2 | 1 | 1 | - |
| 8 | உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 1 | - | - |
| 9 | சட்ட உத்தியோகத்தர் | 1 | - | 1 | - |
| 10 | நிருவாக உத்தியோகத்தர் | 2 | 2 | - | - |
| 11 | மொழிபெயர்ப்பாளர் | 2 | 1 | 1 | - |
| 12 | அமுலாக்கல் உத்தியோகத்தர் ⋆ | 24 | 14 | 10 | - |
| 13 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 879 | 827 | 52 | - |
| 14 | தொழிநுட்ப உத்தியோகத்தர் | 2 | - | 2 | - |
| 15 | முகாமைத்துவ உதவியாளர் | 282 | 163 | 119 | - |
| 16 | இருமொழி எழுதுநர் | 20 | - | 20 | - |
| 17 | தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் | 10 | 8 | 2 | - |
| 18 | சாரதி | 11 | 8 | 3 | - |
| 19 | சாரதி (திணைக்களம்சார்) | 2 | 2 | - | - |
| 20 | அலுவலக உதவியாளர் | 91 | 83 | 8 | - |
| 21 | உற்பத்தி உதவியாளர் • | 30 | 30 | - | - |
| 22 | ஆவண உதவியாளர் • | 10 | 10 | - | - |
| 23 | தற்காலிக தமிழ் எழுதுனர் (ஒப்பந்த அடிப்படையில் ) | 6 | 6 | - | - |
| | | **1,401** | **1,177** | **224** | **-** |

- இப்பதவிகளை வகிப்போர் அப்பதவிகளுக்கு தனிப்பட்ட ரீதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அப்பதவிகள் இரத்துச் செய்யப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற வெற்றிடங்கள், அலுவலகப் பணியாளர் பதவிகளது எண்ணிக்கையில் சேர்க்கப்படுதல் வேண்டும். அதனடிப்படையில் மொத்த அலுவலகப் பணியாளர் சேவை பதவிகளின் எண்ணிக்கை 131 ஆகும்.

★ அமுலாக்கல் உத்தியோகத்தர் சேவையை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளதால் அப்பதவியில் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைப்புச் செய்யலாம்.